# எபிரோனின் ஆராதனை கீதங்கள்

## Hebron Castle Church

No.4, 7th Street, Lake Area,
Nungambakkam, “King’s Highway”
Chennai 600 034
Ph No. 2817 0007, 2817 2023, 6587 8787
www.hebroncastlechurch.org

Published by
Hebron Literature Centre,
Nungambakkam, Chennai 600 034,
Ph: 2817 2323, 2817 2424,
Email: hebronliteraturecentre@gmail.com,
www.hebronliteraturecentre.com

# அட்டவணை



| வரிசை எண் | பாடல் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | அநேக சபைகளை | 22 |
| 2. | அழைப்பின் தொனி | 14 |
| 3. | ஆராதனை எழும்பும் | 23 |
| 4. | ஆசையோடு | 24 |
| 5. | ஆற்றி தேற்றும் | 32 |
| 6. | ஆபிரகாமின் | 16 |
| 7. | ஆயுததாரி | 9 |
| 8. | ஆருயிர் இயேசுவே | 12 |
| 9. | ஆவியான தெய்வமே | 20 |
| 10. | இஸ்ரவேலே நீ | 5 |
| 11. | இஸ்ரயேலு (Telugu) | 40 |
| 12. | இயேசுவின் பிறப்பு | 26 |
| 13. | உம்மோடு இணைந்திட | 15 |
| 14. | உம் பாதங்களில் | 7 |
| 15. | உம்மையல்லால் வேறே ஒரு | 27 |
| 16. | எருசலேமின் அலங்கம் என் உள்ளத்தில் | 33 |
| 17. | எழுந்து நட மேவி போசேத் | 29 |
| 18. | என்னோடு பேசுவார் | 8 |
| 19. | ஒன்று கூடு தமிழா | 17 |
| 20. | கர்த்தரின் சமூகம் | 4 |
| 21. | சிங்காசனத்தில் வீற்றிருக்கும் | 35 |
| 22. | சீயோன் குமாரத்தியே | 21 |

# அட்டவணை


| வரிசை எண் | பாடல் | பாடல் எண் |
|---|---|---|
| 23. | தேவனின் அன்பு | 6 |
| 24. | தேவன் உன்னோடு | 7 |
| 25. | தேவாதி தேவனே | 25 |
| 26. | தேவுனி சமுக்க (Telugu) | 39 |
| 27. | தேவுனி பிரேமா (Telugu) | 41 |
| 28. | நாதோ (Telugu) | 44 |
| 29. | நீ பாதா லக்கு (Telugu) | 43 |
| 30. | நீதியின் சூரியன் | 36 |
| 31. | நீரே எந்தன் சிருஷ்டி கர்த்தர் | 37 |
| 32. | நேசமலரே | 4 |
| 33. | பளிங்கு நதியோரம் | 11 |
| 34. | பிரபு நீதோ (Telugu) | 42 |
| 35. | பரிசுத்த ஆவியே எங்கள் | 30 |
| 36. | பெலனான நகரம் உண்டய்யா | 31 |
| 37. | வாலிபனே ஒ வாலிபனே | 34 |
| 38. | மேக ஸ்தம்பமே | 3 |
| 39. | மேகங்கள் மீதிலே | 18 |
| 40. | மேக ஸ்தம்பமா (Telugu) | 38 |
| 41. | முள்ளுக்குள்ளே | 13 |
| 42. | வான்புறாவே | 10 |
| 43. | ராஜரீகம் பண்ணும் | 19 |
| 44. | ஸ்நேக புஷ்பமா (Telugu) | 40 |

# நேசமலரே Vol – 1

## 1. மேக ஸ்தம்பமே

மேக ஸ்தம்பமே என்னை வழி நடத்தும்
அக்கினி ஸ்தம்பமே என்னை சுத்திகரியும்
ஆவியானவரே என்னை அபிஷேகியும்
அப்பா, பிதாவே உம்மை அண்டிக்கொள்வேன்

நீரே என்னை தேற்றும்,
நீரே என்னை மாற்றும்,
நீரே என்னை நடத்தும் இயேசு ராஜனே – 2

1. காற்றடிக்கும் முழக்கம் போல் வேகம் வந்தீரே,
   கன்மலையாம் கிறிஸ்து என்னை கருவில் கண்டீரே
   கரைந்திடும் உள்ளமெல்லாம் உம்நினைவே,
   கண்டிடும் நேரம்வரை காத்திருப்பேன் – 2 – மேக

2. ஆத்துமா என்றும் உம்மை வாஞ்சிக்கின்றதே
   தாகத்தினால் உள்ளம் என்னில் ஏங்கிடுதே – 2
   சந்ததிமேல் உமது ஆவிதனை – என்
   தயவாய் இன்றே ஊற்றிடுமே – 2 – மேக

3. ஆவிக்கு மறைவாக எங்கே செல்லுவேன்
   சமூகத்தை விட்டு நான் எங்கே ஓடுவேன் – 2
   என்னையும் உயிர்ப்பிக்கும் வல்லதேவனே
   உம்மோடு நித்தியகாலம் சேர்த்திடுமே – 2 – மேக

## 2. கர்த்தரின் சமூகம்

கர்த்தரின் சமூகம் ஜீவ ஏட்டினில்
உன் பெயர் உள்ளதா ... – 2 ஆஆஆ

1. ஜீவ வசனம் பறை சாற்றிடவே
   தம் ஜீவியத்தை தியாகம் செய்தாரே – 2
   இரத்த சாட்சிகள் பெயர் பட்டியலில்
   உன் பெயர் உள்ளதா ... – 2 ஆஆஆ – கர்த்தர்

2. வானமண்டல உயரங்களிலே
   வாழும் சாத்தான் கூட்டத்தை ஜெயித்த – 2
   வெற்றி சிறந்தோர் வீரர் பட்டியலில்
   உன் பெயர் உள்ளதா ... – 2 ஆஆஆ – கர்த்தர்

3. இரண்டாம் வருகையில் இயேசுவின் வருகையில்
   பரிசுத்தர் கூட்டம் பறந்து போவாரே – 2
   அந்த பரிசுத்த பதிவேட்டினிலே
   உன் பெயர் உள்ளதா ... – 2 ஆஆஆ – கர்த்தர்

## 3. நேசமலரே

நேசமலரே என் நேசமலரே
வாசம் செய்ய வந்திட்ட என் நேச மலரே – 2

1. மணம் வீசி கமழும் மல்லிகையாய்
   மனதார துதிப்பேன் மணவாளனை – 2 – நேச

2. சாரோனின் ரோஜாவும், லீலியுமாய்
உள்ளத்தில் மலர்ந்திடும் உன்னதரே – 2 – நேச

3. கல்வாரி சிலுவையில் காட்டிய அன்பு
கல்லான என்னையும் கரைத்திடுதே – 2 – நேச

## 4. இஸ்ரவேலே நீ

இஸ்ரவேலே நீ என்னுடையவன்,
யாக்கோபே நீ என்னுடையவன் – 2
உன்னை நானே தெரிந்து கொண்டேன்,
உன் பெயர் சொல்லி நான் அழைத்தேன்

''என்னோடிருப்பாய், என்னோடிருப்பாய்
என்னோடிருபபாய் சதா காலமும்'' – 2

1. ஏதேனில் உன்னிடம் வாசம் பண்ண
இறங்கி வந்தேன் உன்னை நேசித்ததால் – 2
சோதோமை நினைத்தேன் சோர்ந்து போனேன்
சோர்ந்து போகாதே உன்னை சேர்த்துக்
கொள்வேன் – 2

2. பாராளும் இயேசு கர்த்தர் நானே
பாரினில் வந்தேன் பரிசுத்தராய் – 2
மணவாளன் என்னை சந்தித்திட– நீ – 2
மணவாட்டியே இன்று ஆயத்தமடைவாய் – 2

2. காகளம் ஊதிடும் நேரம் வரை
   ஏங்கியே நீயும் காத்திருப்பாய் – 2
   பிரதான தூதர் முழக்கத்துடனே
   என்னோடு சேர்ப்பேன் மத்திய வானில் – 2

## 5. தேவனின் அன்பு

தேவனின் அன்பு என் தேவனின் அன்பு
என் உள்ளத்தில் இன்று வந்தது – 2

ஆஹா, ஆஹா ஆராதிப்பேன், ஆர்ப்பரிப்பேன்
என் ஆண்டவரை பாடி மகிழ்வேன் – 2

1. என்னை ஆசீர்வதிக்க மகிமை துறந்தவரை
   என்னை மீட்டுக் கொள்ள தன்னை இழந்தவரை
   நன்றியாலே நினைத்து துதிப்பேன் – நாளும்
   என்னை அவர் அன்போடிணைப்பேன் – 2 –
   ஆஹா

2. காரிருள் சூழ்ந்து கலங்கி தவித்த வேளை
   கரங்கள் நீட்டி என்னை அன்பாய் அணைத்தீரே
   புகழ்ந்து பாடிதுதிப்பேன் – உம்
   பாதங்களை என்றும் தொழுவேன் – 2 – ஆஹா

3. சாவின் பள்ளத்தாக்கினில் நடந்து வந்திடினும்
   தீங்கு நெருங்கிடினும் மறவேன் ஆண்டவரை
   தூக்கியே நிறுத்தி – என்னை
   கண்மணிபோல் காத்திடுவார் – 2 – ஆஹா

## 6. தேவன் உன்னோடு

தேவன் உன்னோடு இருப்பார் உன்னை காப்பார்
உள்ளங் கையில் உன்னை வரைந்து வைத்தார் – 2

1. அபிஷேக நாதர் அன்பர் அவரே
   அளவில்லா கிருபை தந்தவர் அவர் – 2 – தேவன்

2. உன்னோடிருந்து உன்னை அணைப்பார்
   ஏக்கங்கள் நேரத்தில் உன்னை சுமப்பார் – 2
   தேவன்

3. எங்கும் நிறைந்தவர் உன்னை காப்பார்
   எல்லாம் அறிந்தவர் உயர்த்திடுவார் – 2 – தேவன்

4. யெகோவா ரஃபா பரிகாரி கர்த்தர்
   யெகோவா நிசி உன் ஜெய தேவன் – 2 – தேவன்

## 7. உம் பாதங்களில்

உம் பாதங்களில் என் கண்ணீர் மஞ்சம்
கதறும் நெஞ்சுக்கு நீர்தான் தஞ்சம்
கண்களில் கடலை அடைத்த தேவனே
கருவிழி அருவியால் நனைத்த தேவனே – 2

தேவா ஸ்தோத்ரம், தேவா ஸ்தோத்ரம்,
தேவா ஸ்தோத்ரம், இயேசு தேவா ஸ்தோத்ரம் – 2
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
ஆமென், அல்லேலூயா – 2

1. உமது வழி நான் நடக்கும் தீபமாயிற்றே
உமது சத்தியம் நான் பேசும் வசனமாயிற்றே – 2
உமது ஜீவன் வாழ்வளிக்கும் தேசமாயிற்றே
உமது துதி திருப்தியாக்கும் – உணவாயிற்றே – 2

2. அர்ப்பணித்த நேரத்தில் விடுவித்தீர் ஐயா
அருமையான தாயாக அணைத்தீர் ஐயா – 2
பொன், வெள்ளி, பேர் புகழ் ஈடாகாதே
உமதன் பால் எந்தன் உள்ளம் –
பொங்கி வழியுதே – 2

3. சிலுவை வழியே சிறந்த வழி என்று காட்டினீர்
உள்ளங்களை கொள்ளை கொள்ளும் வல்ல
தேவனே – 2
இமயத்திலும் குமரியிலும் இயேசு வேண்டுமே
கர்த்தரே தெய்வம் என்று முழங்க வேண்டுமே – 2

## 8. என்னோடு பேசுவார்

என்னோடு பேசுவார், என் நேசர்
என்னோடு பேசுவார் – 2

1. தனிமை என்னை வாட்டியபோது
தாயாக வந்து அணைத்திட்ட தேவன் – 2

2. ஆகாரின் கண்ணீரை அறிந்திட்ட தேவன்
அற்புதமாக தாகம் தீர்த்தார் – 2

3. திக்கற்ற பிள்ளையின் கண்ணீரை கண்டார்
   பறந்து காக்கும் பட்சிபோல் வந்தார் – 2

4. என்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்
   சீயோனில் என்னை சேர்த்து மகிழ்வார் – 2

# ஆயுததாரி Vol – 2

## 9. ஆயுததாரி

ஆயுததாரி, நான் ஆயுததாரி
இராஜாவின் பக்கம் நிற்கும் ஆயுததாரி

1. நிலையங்கி தரித்திருப்பார் – முகம் – அவர்
   சூரியனைப் போலிருக்கும் – சத்தம் – 2
   பெருவெள்ள இரைச்சல்போல – அவர்
   பூலோகம் அரசாளுவார் – 2 – ஆயுத

2. இராமுழுதும் விழித்திருப்பேன் – நான்
   கண்ணுறங்க மறந்திடுவேன் (நான்) – என் – 2
   காவலிலே தரித்திருப்பேன் – என்
   கண்களையும் ஏறெடுப்பேன் – 2 – ஆயுத

3. மலைகளை நொறுக்கிடுவேன் – பார்க்கும்
   குன்றுகளை பதராக்குவேன் – என்
   தரிசனம் பெற்றிடுவேன் – நாளும்
   தரணியில் செயல்படுவேன் – 2 – ஆயுத

4. எக்காளம் ஊதிடுவேன் – நாளும்
எச்சரித்து செயல்படுவேன் – நான் – என்றும் – 2
சேனைகளை வென்றிடுவேன்
என் தேசத்தை சுதந்தரிப்பேன் – 2 – ஆயுத

## 10. வான்புறாவே

வான்புறாவே, வான் புறாவே,
என் மேல் இறங்கிடும்
கபடம் இல்லா மனிதனாக
என்னை மாற்றிடும்

1. வானங்கள் திறந்திருக்க
வல்லமையாய் வந்தவரே – 2
தேவாவியின் வெள்ளம் என்னில் புரள
தேற்றி ஆற்றி பெலப்படுத்தும் – 2 – வான்

2. அபிஷேக வல்லமையால்
நுகமெல்லாம் முறித்திடுமே – 2
அபிஷேக நாதர் நீரல்லவோ
ஆட்கொண்டு நிரப்பிடுமே – 2 – வான்

3. ஆனந்த தைலத்தினால்
துயரெல்லாம் துடைத்திடுமே – 2
பரிசுத்தம் என்றும் என்னில் காண
பரமனே நிறைத்திடுமே – 2 – வான்

4. புது எண்ணெய் அபிஷேகத்தால்
புது பெலன் அடைந்திடவே, – 2
திசை கெட்டு எங்கும் அலைந்திடாமல்
தினம் என்னை நடத்திடுமே – 2 – வான்

5. உன்னதத்தின் ஆவியினால்
உலகத்தை ஜெயித்திடவே – 2
உண்மையான சாட்சியாய் வாழ்ந்திடுவேன்,
உயிருள்ள நாள் வரையில் – 2 – வான்

## 11. பளிங்கு நதியோரம்

பளிங்கு நதியோரம், பரமனை தேடிடுவேன்,
கனி – தரும் வாழ்க்கை என்னில் உண்டு
கர்த்தரை நாடிடுவேன் – 2

1. ஜீவவிருட்சமாய் என்னை நோக்கினார்
ஜீவனிலே நான் செழித்தோங்க – 2
பாவ வாழ்க்கையை மறக்கும் நாளில் – 2
பாராளும் தேவன் என் பரவசமே – 2 பளிங்கு

2. ஒளிவீச என்னை அழைத்த தேவன்,
கலங்கரை விளக்காய் மாற்றிடுவார் – 2
ஒளியின் கதிராய் பிரகாசிப்பேன் நான்
ஒளியின் சாட்சியாய் வாழ்ந்திடுவேன் – 2 பளிங்கு

3. பரவி பாய்கின்ற ஆறுகளாய்
பாரினில் நான் என்றும் செயல்படுவேன் – 2
பாலசிங்கமாய் எழுந்து நடப்பேன்
ஜெயகெம்பீரம் என்னில் உண்டு – 2 பளிங்கு

4. மந்தையை மேய்த்திடும் அழைப்பு தந்தார்,
மணவாட்டி சபையாய் மாறிடவே – 2
மறந்திடுவேனோ தேவ அழைப்பை – 2
மறுரூபம் ஆகும் நாள் வரையில் – 2 பளிங்கு

## 12. ஆருயிர் இயேசுவே

ஆருயிர் இயேசுவே,
அடைக்கல நாதரே,
பாராளும் வேந்தனே,
ஜெய கீதங்கள், உமக்கு ஜெயகீதங்கள் – 2

1. தூதர்கள் போற்றிடும்
துதிகளின் பிரியரே
துணைவராம் தூயரே, – 2
ஜெயகீதங்கள், உமக்கு ஜெயகீதங்கள் – 2 –
ஐயா – 2

2. ஊற்றுண்ட தைலமே
ரசத்திலும் மதுரமே
பள்ளத்தாக்கின் லீலியே – 2
ஜெயகீதங்கள், உமக்கு ஜெயகீதங்கள் – 2 –
ஐயா – 2

3. சீயோனில் சேர்த்திட
   மரணத்தை வென்றீரே
   ஜீவனின் விருட்சமே – 2
   ஜெயகீதங்கள், உமக்கு ஜெயகீதங்கள் – 2 –
   ஐயா – 2

4. உலகத்தின் வெளிச்சமே,
   ஒப்பற்ற செல்வமே
   தியாகத்தின் தீபமே – 2
   ஜெயகீதங்கள், உமக்கு ஜெயகீதங்கள் – 2 –
   ஐயா – 2

## 13. முள்ளுக்குள்ளே

முள்ளுக்குள்ளே லீலி புஷ்பமாய் – என்
நேசர் என்னை தேடிடுவாரோ – 2
"மருந்தாவேனா, நல்ல மருந்தாவேனா,
மனிதரை மாற்றும் மருந்தாதேவனா"– 2

1. அழைத்திடும் சத்தம் கேட்டு – நானும்
   ஆயத்தம் ஆகிடுவேன் – என்
   அன்பரின் குரல் கேட்டு – 2 என்னை
   அவருக்காய் படைத்திடுவேன் – 2

2. காயங்கள் ஆற்றிடுவார் – என்னை
   கனிவோடு நோக்கிடுவார் – 2
   என் வேதனைக்கு மருந்தாவார் – நாளும் – 2
   வெற்றிபெற செயல்படுவார் – 2

3. நெருக்கத்தில் உதவிடுவார்
என்னை நேசித்து மகிழ்ந்திடுவார் – என் – 2
பாவத்தை மாற்றிடுவார் – என்றும்
பரிசுத்தப் படுத்திவார்

4. போதித்து நடத்திடுவார் – என்னில்
புதுவாழ்வை கொடுத்திவார் – 2
என்னை ஆற்றியே தேற்றிடுவார் – 2
என்றும் ஆறுதல் படுத்திடுவார் – 2

5. மத்திய வானத்திலே – இயேசு
சீக்கிரம் வந்திடுவார் – 2 – நாம்
மகிழ்வோடு காத்திருப்போம் – 2 – நம்மை
மகிமையில் சேர்த்திடுவார் – 2

## 14. அழைப்பின் தொனி

அழைப்பின் தொனி என்னாளும் என்னில் கேட்குதே
அலை அலையாய் இயேசு அன்பு என்னில் பாயுதே – 2

1. அக்கரைக்கு அழைக்கும் நேசர் அன்பு நேசரே
அவரோடு நாமும் செல்ல ஆயத்தமாவோம் – 2
அலைகடல் மேல் நடந்தவரின் அன்பு பெரியதே
கடும் புயலும் பெரும் காற்றும் என்னை
தொடாதே – 2

2. மாறாத உம்முடைய கிருபை வரங்களும்
ஆவியாலும் தேகத்தாலும் ஆணியாகுதே – 2
பொன் பொருளும் மண்ணின் வாழ்வும்
மாயையாகுதே
மணவாளன் இயேசுவை நான் நினைத்து
பார்க்கையில் – 2

3. கனி மரமாய் செழித்திடவே கர்த்தர் அழைத்தாரே
கலங்காமல் என்னாளும் உம்மை தொடருவேன் – 2
கல்வாரி பாதையிலே தோல்வி இல்லையே
கன்மலையாம் கிறிஸ்து என்னை கரம்
பிடித்தாரே – 2

4. மோட்ச யாத்திரை செல்லுகின்ற மேலோகவாசி
இப்புவியை கடந்து நான் அக்கரை சேர்வேன் – 2
ஆரவார சத்தம் என்னில் வானில் கேட்கும் நாள்
அவரோடு சேர்ந்து நான் விண்ணில்
மகிழுவேன் – 2

## 15. உம்மோடு இணைந்திட

உம்மோடு இணைந்திட – எந்தன்
உள்ளம் எல்லாம் தவிக்கின்றதே – 2

(இணைத்திடுமே, தேவா இணைத்திடுமே
என்னாளும் உம்மோடு இணைத்திடுமே) – 2

1. அழுகையின் பள்ளத்தாக்கிலே, – என்னை
அணைத்திடும் அன்பு தெய்வமே – 2

2. வல்லமையை ஊற்றும் வேளையில் – என்றும்
   வானங்கள் திறக்கட்டுமே – 2

3. மரண இருளின் வேளையில் – என்னை
   மறவாமல் காக்கும் – தேவனே – 2

4. பரலோக காட்சிகளை – நானும்
   பலநாளும் காண வாஞ்சையே – 2

## 16. ஆபிரகாமின்

ஆபிரகாமின் விசுவாசம் என்னில் தங்கட்டும்
ஈசாக்கின் ஆசீர்வாதம் என்னில் தங்கட்டும்

(அசைவாடும் தேவ ஆவி அசைவாடுமே,
அன்புள்ளோனாய் என்னை மாற்றி அசைவாடுமே) – 2

1. உயிர்ப்பிக்கும் தேவ பெலன் என்மேல் வரட்டும்
   உன்னதத்தின் தேவ பெலன் என்மேல் வரட்டும் – 2
   அசைவாடும் தேவ பெலன் என்மேல் வரட்டும்
   ஆண்டு கொள்ளும் தேவ பெலன் என்மேல்
   வரட்டும் – 2

2. கட்டுகளை அறுக்கும் பெலன் என்மேல் வரட்டும்
   கடன் தொல்லை மாற்றும் பெலன் என்மேல்
   வரட்டும் – 2
   வியாதிகளை நீக்கும் பெலன் என்மேல் வரட்டும்
   செய்வினைகள் அகற்றும் பெலன் என்மேல்
   வரட்டும் – 2

3. ஆவியில் ஜெபிக்கும் பெலன் என்மேல் வரட்டும்
அபிஷேக வார்த்தை பெலன் என்மேல் வரட்டும் – 2
கவலை கண்ணீர் மாற்றும் பெலன் என்மேல்
வரட்டும்
சிலுவை கொடி சுமக்கும் பெலன் என்மேல்
வரட்டும் – 2

## தமிழா Vol – 3

### 17. ஒன்று கூடு

ஒன்று கூடு தமிழா இயேசுவில்
ஒன்று கூடு தமிழா – 2
உயர் மக்கள் என்றாலும்
தாழ் மக்கள் என்றாலும்
நாம் எல்லாம் தமிழல்லவா
தமிழ்மொழி பேசும் மக்களல்லவா

1. சிதறுண்ட நம்மை எல்லாம்,
சீராக்கி ஒன்று சேர்க்கும் – 2
சிற்பியாய் செயல்படுவார் – நம் தேவன் – 2

2. தண்ணீரை கடக்கும்போதும்
அக்கினியில் நடக்கும்போதும் – 2
பேர் சொல்லி அழைத்தேன் என்றார் –
என் தேவன் – 2

3. பக்தியுள்ள உன்னைக் கொண்டு
   பார் எங்கும் நடத்தி சென்று – 2
   பரலோக திட்டம் தருவார் – என் தேவன் – 2

4. பரலோக காட்சி எல்லாம்
   கண்ணாலே கண்ட ஸ்தேவான் – 2
   கரங்களால் ஆசீர்பெற்றான் – தேவன் – 2

## 18. மேகங்கள் மீதிலே

மேகங்கள் மீதிலே – இயேசுவின்
வருகை என்னை அழைத்திடுமே – 2
ராஜாதி ராஜனே வாரும் – உம்
அன்பையெல்லாம் என்னில் அள்ளிதாரும் – 2

1. விண்ணவர் சாயலை
   கண்களால் காணவே
   உள்ளம் ஏங்கிடுதே – 2
   மின்னலைப் போல் பிரகாசம் – நடு
   வானத்தில் தோன்றிடுமே – 2 – மேகங்கள்

2. செழிப்பின் வாழ்க்கையில்
   அமிழ்ந்து மிதக்கும்
   அன்பு சகோதரேன
   இன்று உள் ஜீவன் போனால்
   எங்கே நீ சென்றிடுவாய் – 2 – மேகங்கள்

3. திறப்பின் வாசலில்
நிற்கின்ற வீரனாய் – 2
தேவன் தேடுகின்றார்
பொறுப்பினை நீ உணர்ந்தால் – பொங்கி
எழுவாய் இயேசுவுக்காய் – 2 – மேகங்கள்

4. நாதனின் இரத்தத்தால்
கழுவப் பட்டோரெல்லாம்
நானிலம் முழுதும் உண்டு – 2
உன்னதத்தில் உயர் இடத்தில் – உன்னை
உண்மையாய் என்றும் சேர்ப்பார் – 2 – மேகங்கள்

## 19. ராஜரீகம்

ராஜரீகம் பண்ணும் எந்தன் ராஜாதி ராஜா
ஆளுகை செய்வார் என்னை (என்னில்)
ஆளுகை செய்வார் – 2

1. அவர் சிங்காசனம் என்றும் நிலையானதே
அவர் செங்கோல் என்றும் நீதியுள்ளதே – 2
அவர் மணிமகுடம் என்றும் முடிவில்லாதது – 2
அவரது ஆட்சியே என்றும் என்றும் மாறாதது –
ராஜரீகம்

2. அவர் பட்டயத்தால் என்றும் ஜெயித்திடுவார்
அவர் பகைஞனை கொன்று வாகை சூடுவார் – 2
அவர் ஓங்கிய புயத்தால் பராக்கிரமம் செய்வார் – 2
அவரது ஆட்சியே என்றும் என்றும் அழியாதது –
ராஜரீகம்

3. நீதி என்னும் மார்க்கவசம் அணிந்திடுவாய்
இரட்சிப்பை சிரசில் என்றும் தரித்திடுவாய் – 2
துதியின் உடையை நாள்தோறும் உடுத்திடுவாய்
அவரது ஆட்சியில் என்றும் என்றும் நிலைத்திடுவாய்
– ராஜரீகம்

4. ஆயத்தம் என்னும் பாதரட்சை அணிந்திடுவாய்
விசுவாசமாம் கேடகத்தை பிடித்திடுவாய் – 2
விண்ணப்பத்தை நாள் தோறும் செலுத்திடுவாய் – 2

அவரது ஆட்சியில் ஆயிரம் ஆண்டு மகிழ்ந்திடுவாய்
– ராஜரீகம்

## 20. ஆவியான தெய்வமே

ஆவியான தெய்வமே
அனல் மூட்டும் நாதரே – 2
அன்பான கீதங்களால் – என்னை
ஆற்றி தேற்றிடுமே – 2
“வாரும் நேசரே என் அன்பு நேசரே
அரசாள வாரும் – என் ஆத்தும நேசரே” – 2

1. பலவானாய் மாற்றிடும் தூய ஆவியே
பெலவீனம் அனைத்தையும் நீக்கிடுமே – 2
மலைமீது நின்றிடும் பட்டணம் போல
பிரகாசித்து ஜொலிக்க அனல் மூட்டுமே – 2 –
ஆவியான

2. அற்புதங்கள் செய்திடும் அன்பின் ஆவியே
   அன்றாடம் வாழ்வினில் கிரியை செய்யுமே – 2
   மான்கள் நீரோடை நோக்குமாப் போல
   ஆத்துமான வாஞ்சிக்க தயை செய்யுமே – 2 –
   ஆவியான

3. வரங்களை தந்திடும் நல்ல ஆவியே
   வல்லமையாய் என்னையும் நடத்திடுமே – 2
   ஊழியத்தில் என்றும் பக்தியோடு உமக்கு
   இராப்பகலாய் உழைத்திட ஜெயம் தாருமே – 2
   ஆவியான

4. உலகத்தை மாற்றிடும் வல்ல ஆவியே
   ஒற்றுமையாய் செயல்பட கிருபை செய்யுமே – 2
   யூதேயா, சமாரியா, எருசலேமெங்கும்
   சாட்சியாய் வாழ்ந்திட வழி செய்யுமே – 2 ஆவியான

## 21. சீயோன் குமாரத்தியே

சீயோன் குமாரத்தியே – நீ
மகிழ்ந்து கீதம் பாடு
தேவாதி தேவன் உன்னை அழைத்தார்
என்றும் காத்து நடத்திடுவார் – 2

1. விலையின்றி கொடுக்கப்பட்டாய் – நீ
   பணமின்றி மீட்கப்பட்டாய் – 2
   எழும்பு சீயோனே, எழும்பு சீயோனே – 2
   வல்லமையை இன்று தரித்துக்கொள் – சீயோன்

2. போகும் வழி காட்டிடுவார்
வாதை நோய்கள் மாற்றிடுவார் – 2
ஜெயம் பெற்றிடுவாய், ஜெயம் பெற்றிடுவாய் – 2
இரட்சகர் இயேசு உனக்குண்டு – சீயோன்

3. பரிசுத்தர் நடுவில் உண்டு
பரன் இயேசு அருகில் உண்டு – 2
பயப்படாதே நீ, பயப்படாதே நீ – 2
திடன் கொண்டு நீ எழும்புவாய் – சீயோன்

4. சீயோனில் சேர்ந்திடவே
எக்காளம் வானில் தொனிக்கும் – 2
பறந்திடுவாய், பறந்திடுவாய் – 2
ஜெய கீதங்கள் பாடி மகிழ – சீயோன்

## 22. அநேக சபைகளை

அநேக சபைகளை கட்டி எழுப்பும்
ஆத்ம பாரத்தை தாரும்
என் அன்பு நேசரே வாரும் – 2

வாரும் ஐயா, எழுந்து வாருமையா,
எழுந்து வாருமையா, எழுந்து வாருமையா ஆஹா, ஹா
ஆஹாஹா வாரும் ஐயா எழுந்து வாருமையா,
எழுந்து வாருமையா, எழுந்து வாருமையா – 4

1. பட்டணம் கிராமம் பரவி சென்றுமே
பரமனின் சபைகளை படைப்போம் – எங்கும்
எழுப்புதல் தீயை வளர்ப்போம் – 2 – வாரும் ஐயா

2. சூரியன் உதிக்கும் திசைகளிளெல்லாம்
   கிறிஸ்துவின் மகிமையை காண்போம் – 2
   கிதியோனின் சேனையாய் எழும்புவோம் – 2
   வாரும் ஐயா

3. தேசம் எங்கிலும் இயேசுவின் நாமம்
   உயர்த்திட அருள் தாரும்,
   உம் உன்னத பெலத்தால் தாரும் – 2 –
   வாரும் ஐயா

4. ஜீவன் இருக்கும் நாட்களில் எல்லாம்
   ஜீவாதிபதிக்காய் உழைப்போம்
   தேவாசீர்வாதத்தை பெறுவோம் – 2 – வாரும் ஐயா

## 23. ஆராதனை எழும்பும்

ஆராதனை எழும்பும்
என் ஆண்டவரின் சமூகத்திலே – 2
அதிகாலையில் நானும் தேடிடுவேன்
என் நேசரின் திருமுகத்தை – 2

1. பனிகால பூக்கள் மலர்வது போல
   ஜெப தாகம் மலருதையா
   விழிப்புடனே உம்மை நோக்கிடவே – 2
   விரைந்தெம்மை எழுப்பிடுமே – நீ – 2 –
   ஆராதனை

2. வெள்ளங்கள் பெருகி மோதிட்டாலும் – என்
எண்ணங்கள் மாறாதையா
பொருத்தனை செலுத்தி ஆராதிப்பேன் – 2
என் புண்ணியரின் பாதத்தில் என்றும் – 2 –
ஆராதனை

3. அக்கினி சோதனை சூழ்ந்திட்டாலும்
என் ஜெப நேரம் குறையாதையா – 2
எக்காளம் தொனித்திடும் நேரத்திலே – 2
என் இயேசுவோடு இணைந்திடுவேன் – 2 –
ஆராதனை

4. ஆழியின் அலைகள் ஓயாது போல,
ஜெப வாஞ்சை ஓயாதையா,
ஜாதிகள் நடுவில் நாயகனை – 2
நாள்தோறும் துதித்திடுவேன் – 2 – ஆராதனை

## 24. ஆசையோடு

ஆசையோடு பார்க்கும் பார்வை
என் தேவனை கண்கள் தேடும் – 2
கன்மலையே கன்மலையே – என்னும்
கூக்குரல் என்னில் எழும்பும்

1. தேடிடும் எந்தன் உள்ளத்திலே
தேனாய் வந்து இனித்தவரே – 2
கன்மலை வெடிப்பில் காத்தவரே
கழுகுபோல் என்னை சுமந்தவரே – 2

2. பாரினில் பலியாய் வந்தவரே
பாடுகள் அனைத்தும் சகித்தவரே – 2
இந்திய தேசம் உம்கைகளில்
என்னையும் போல இரட்சித்திடுமே – 2

3. பரிசுத்த வாழ்வை கொடுத்தவரே
பாவம் போக்க வந்தவரே – 2
நன்றியால் உள்ளம் பொங்கிடுதே
நாளும் நினைத்து மகிழ்ந்திடுதே – 2

4. நல்ல போராட்டம் போராடியே
எந்தனின் ஓட்டம் முடித்திடுவேன் – 2
மாசற்றோனாய் தேவ மகிமையிலே
சீயோனில் சேர்ந்து வாழ்ந்திடுவேன் – 2

## 25. தேவாதி தேவனே

தேவாதி தேவனே – உம் அபிஷேக கிருபைகளை
என்மேலே ஊற்றிடுமே
நிர்மல நாதனே, நிர்மல நாதனே – 2
என்னையும் நிரப்பிடுமே, என்னையும் நிரப்பிடுமே

1. உலகத்தை அசைக்கும் அபிஷேக வல்லமையை
என்மேலே ஊற்றிடுமே – 2
மறைந்து கிடக்கும், தாலந்தை எல்லாம்
திரும்ப தந்திடுமே – 2 – தேவாதி

2. கர்த்தரை துதிக்கும் புதுப்பாட்டின் ஆவியை
   நாவில் தந்திடுமே – 2
   கற்பனையெல்லாம் காத்து நடந்திடும்
   கிருபையை பொழிந்திடுமே,
   கிருபையை பொழிந்திடுமே – 2 – தேவாதி

3. அழிகின்ற மனிதரை கண்ணோக்கி பார்த்திடும்
   அன்பு உள்ளம் வேண்டும் – 2
   ஆத்தும பணியை கருத்தோடு செய்ய
   அனைவரும் வரவேண்டும்,
   அனைவரும் வரவேண்டும் – 2 – தேவாதி

4. எலியாவின் தேவன் எங்கே என்றழைத்த
   எலிசாவின் வரம் வேண்டும் – 2
   தீர்க்கதரிசியாய் தேசத்தை நடத்தும்
   ராஜபெலன் வேண்டும்
   ராஜபெலன் வேண்டும் – 2 – தேவாதி

# கிறிஸ்துமஸ் கீதங்கள்

## 26. இயேசுவின் பிறப்பு

இயேசு பிறந்த நாள்
எந்தன் தேவன் பிறந்த நாள் – 2
மகிழ்ச்சி! மகிழ்ச்சி!! மகிழ்ச்சி!!!
எந்தன் நேசர் பிறந்த நாளில் – 2

1. தூதர்கள் போற்றிடும் பரிசுத்தராம்
மேய்ப்பர்கள் துதித்திடும் இரட்சகராம் – 2
ஞானிகள் பணிந்திடும் ராஜனவர்
நானிலம் உயர்ந்திடும் மகிபனவர் – 2 –
இயேசு பிறந்த – இயேசு பிறந்த

2. சந்தோஷம் நல்கிடும் சமாதானராம்
பயத்தை போக்கிடும் வல்லவராம் – 2
இருளை நீக்கிடும் ஒளிவெள்ளமாம்
இதயத்தில் வசிக்கும் இயேசு, அவரே – 2 –
இயேசு பிறந்த

3. தாழ்மை கோலம் புரிந்தவராம்
தன்னையே பரிசாய் கொடுத்தவராம் – 2
வானில் ஜொலித்திடும் நட்சத்திரமாய்
வாழ்வில் வசிக்கும் இயேசு அவரே – 2 –
இயேசு பிறந்த – இயேசு பிறந்த

4. நானே வாசல் என்றுரைத்தார்
நாளும் வாழ்வில் நடத்திடுவார் – 2
மோட்ச வாசலை திறந்திடுவார்
ஜீவ கீரிடம் உனக்களிப்பார் – 2 – இயேசு பிறந்த

## 27. உம்மையல்லால் வேறே ஒரு

உம்மையல்லால் வேறே ஒரு தேவன் இல்லையே
உள்ளம் எல்லாம் தினம் பாடும் – கீதம் அதுதானே

1. மண்ணில் உதித்தவரே, விண்ணை துறந்தவரே
துன்பம் சகித்தவரே சந்தோஷ விண்ணொளியே – 2
மகிமை மைந்தனே என் மன்னவன் நீர்தானே
– உம்மையல்லால்

2. மானிடர் இருள் நீக்க, மாட்டு
தொழுவத்தில்உதித்தவரே
மண்ணுயிர் மீட்டிடவே தன்னுயிர் கொடுத்தவரே
அதிசய தேவனே என் ஆலோசனை கர்த்தரே
– உம்மையல்லால்

3. நான் செல்லும் பாதையெல்லாம் நேசர் வருவாரே
தாவீதின் மைந்தனாய் தேற்றி மகிழ்வாரே,
அற்புத தேவனே என்னை அணைத்திடும் இராஜனே
2 – உம்மையல்லால்
– உம்மையல்லால்

4. பூலோக மகிமைகளை தேடாத தேவனவர்,
என்றும் ஒளிவீசும் பிதாவின் குமாரனவர் – 2
கண்ணிமை நேரத்தில் என்னை விண்ணிலே
சேர்த்திடுவார்
– உம்மையல்லால்

## 28. எழுந்து நட மேவி போசேத்

எழுந்து நடமேவிபோசேத்
எழுந்து நட மேவி போசேத் – 2
"எஹோவா ராப்பாநீர் தான்,
எஹோவா ஷம்மா நீர் தான்"

1. ராஜாவின் வீட்டில் அதிகாரமா
   நாளெல்லாம் வாழ்வில் சுக போகமா – 2
   ரசித்து குடிக்கும் – சுவைத்து குடிக்கும்
   புசித்து குடிக்கும் – நிலைதானம்மா
   புத்தியை தேட – சத்தியம் தேட
   புண்ணியம் தேட வழியில்லையா – எஹோவா

2. சுவிசேஷம் சொல்ல மனதில்லையா
   சோம்பேறித்தனமே உன் வாழ்க்கையா? – 2
   அற்புதம் மிகுதி ஆனந்தம் மிகுதி
   அறுவடை மிகுதி ஆளில்லையே
   அருமை நாதர் ஆத்தும நாதர்
   அன்பின் நாதர் வரப்போகிறார் – எஹோவா

3. பரிசுத்த ஆவியின் வரம் இல்லையோ
   பார்ப்போர் இடம் எல்லாம் பரிகாசமா – 2
   பாவியை மீட்க பரமனை பார்க்க,
   பரலோகம் செல்ல வழியில்லையா
   பகட்டை பார்த்தார் பணத்தைப் பார்த்தார்
   பாழாய் போய்விடும் உன் வாழ்க்கையே!
   – எஹோவா

4. யுத்தமும் நோயும் பெருகிடுதே
இயேசுவின் வருகையும் நெருங்கிடுதே – 2
ஆவிபோகும் ஆனந்தம் போகும்
அந்தி கிறிஸ்து வரப்போகிறான்
ஆத்தும நேசர் ஆகாய நேசர்
ஆருயிர் நேசரை அணைத்திடுவாய்! – ஹோவா

## 29. பரிசுத்த ஆவியே எங்கள்

பரிசுத்த ஆவியே எங்கள்
பரிசுத்த ஆவியே – 2
வாக்குக்கடங்கா பெருமூச்சுடன்
வேண்டுதல் செய்பவரே – 2

1. வாசல் நிலைகள் அதிரும்
நீர் நோக்கி பார்ப்பதினால்
என் வாழ்வும் வழியும் வளரும்
நீர் நடத்தி செல்வதினால் – 1
பரிசுத்தரே பரிசுத்தரே
பரிசுத்தமாக்கிடுமே – 2 – பரிசுத்த

2. பாவ சாபம் மாறும்
நீர் அருகில் இருப்பதினால்
துன்பம் எல்லாம் தீரும்
நீர் வாக்கு கொடுப்பதினால் – 1
பரிசுத்தரே, பரிசுத்தரே
பரிசுத்த மாக்கிடுமே – 2 – பரிசுத்த

3. வியாதி எல்லாம் அகலும்
   நீர் என்னை தொடுவதினால்
   வீர இராகம் பாடும்
   நீர் விரும்பி அணைப்பதினால் – 1
   பரிசுத்தரே, பரிசுத்தரே
   பரிசுத்த மாக்கிடுமே – 2 – பரிசுத்த

4. நித்திய ஜீவன் மலரும்
   நீர் என்னை தெரிந்ததினால்
   நீதி பாதை கிடைக்கும்
   நீர் என்னை அழைப்பதினால் – 1
   பரிசுத்தரே, பரிசுத்தரே
   பரிசுத்த மாக்கிடுமே – 2 – பரிசுத்த

## 30. பெலனான நகரம் உண்டய்யா

பெலனான நகரம் உண்டய்யா – எனக்கு
பெலனான நகரம் உண்டய்யா – 2
அரணான கோட்டை உண்டய்யா – எனக்கு
அரணான கோட்டை உண்டய்யா – 2
"அல்லேலுயா, ஆமென் அல்லேலுயா" – 4

1. ஆவியிலே கலங்கிடும் வேளையிலே – எனக்கு
   அக்னியின் வளையம் நீர்தானே – 2
   அருவருப்பை அகற்றிடும் நேரத்திலே – எனக்கு
   அடைக்கப்பட்ட தோட்டமும் நீர்தானே – 2

2. இரட்டுடுத்தி ஜெபிக்கும் நாட்களிலே – எனக்கு
   இரட்சிப்பின் மதிலே நீர் தானே – 2
   ஆபத்திலே கூப்பிடும் நேரத்திலே – எனக்கு
   இரவெல்லாம் இன்பமே நீர்தானே – 2

3. ஆபத்திலே கூப்பிடும் நேரத்திலே – எனக்கு
   ஆறுதல் துணையும் நீர்தானே – 2
   அலைமோதும் வாழ்க்கை படகினிலே – எனக்கு
   அற்புதம் செய்பவர் நீர்தானே – 2

4. ஊழியத்திலே கதறிடும் வேளையிலே – எனக்கு
   உற்சாக ஊற்றும் நீர்தானே – 2
   உயர்ந்த சீயோன் கோட்டையிலே – என்றும்
   உம்முடன் சேர்ந்து வாழ்ந்திடுவேன் – 2

## 31. ஆற்றி தேற்றும்

ஆற்றி தேற்றும்
என் இயேசு ராஜன்
ஆறுதல் படுத்திடுவார் – 2
“அனல் மூட்டும் தேவனே
அபிஷேகத்தால் அனல் மூட்டும்” – 2

1. பாதை அறியாமல் நடந்து வந்தேன்
   பார்க்கும் இடம் எல்லாம் இருளைக் கண்டேன் – 2
   மின்னலைப் போல ஒளி வெள்ளம் – 2
   என்னில் எழும்பி மிளிர கண்டேன் –
   என்னை ஆற்றி – 2

2. இதயம் உடைந்து அழுத வேளை
இறங்கி வந்து கரம் பிடித்தார் – 2
பிரிந்த உறவை நினைத்த வேளை – 2
பிரபுக்கள் மத்தியில் அமரச் செய்தார் – 2

3. ஒலிவ மரமாய் ஓங்கி வளர
உன்னத அழைப்பால் உணர்த்தினாரே – 2
சூரிய, சந்திர, நட்சத்திரமாய் – 2
ஒளிகொடுக்க என்னை அழைத்தாரே – 2

4. மகிமையின் வாழ்வும் நெருங்கிடுதே
மாசற்ற அன்பால் அணைத்திடுவார் – 2
நித்திய வாழ்வை அனுபவிக்க – 2
நித்தமும் என்னை சேர்த்திடுவார் – 2

## 32. எருசலேமின் அலங்கம் என் உள்ளத்தில்

எருசலேமின் அலங்கம் என் உள்ளத்தில்
எரிகோவின் அலங்கம் என் வாழ்'கையில் – 2
"பாடுவேன் என் பரமனையே
நாடுவேன் என் நாதனையே – 2
ஷாலோம் ஷாலோம் ஷாலோம்
ஷாலோம் ஜெருஷலோம் – ஓஹோ

1. எழுந்து கட்டிட ஏக்கம் உண்டு
எல்லாம் நிறைவேற்ற வாஞ்சை உண்டு – 2
பார்க்கும் இடம் எல்லாம பலிபீடமாய் – 2
பாரத தேசம் எங்கும் நடந்தேறுதே – எருசலேமின்

2. அறுப்பு காலம் எனக்கு உண்டு
   அறுவடை செய்யும் ஆட்கள் உண்டு – 2
   முந்தின ஆலய மகிமையிலும்
   பிந்தின ஆலய மகிமையாகும் – எருசலேமின்

3. சத்திய வேதம் எனக்கு உண்டு
   சத்துருவை ஜெயிக்கும் பெலனும் உண்டு – 2
   பொக்கிஷ தெய்வம் இயேசுவை
   பூலோகம் எங்கும் சுமந்திடுவேன்–எருசலேமின்

4. திறப்பின் வாசல் எனக்கு உண்டு
   திறப்பில் நிற்கும் மனிதன் உண்டு – 2
   திரளாய் இருக்கும் மனிதர்களை
   திரிந்து நானும் சேர்த்திடுவேன்–எருசலேமின்

## 33. வாலிபனே ஓ வாலிபனே

வாலிபனே ஓ வாலிபனே
இயேசவில் மகிழ்ந்திடுவாய்
வானவராம் அவர் அன்பினிலே – 2
வாழ்ந்து சுகித்திடுவாய்
“இன்றைய இளைஞன் நீ
நாளைய தலைவன் நீ” – ஓஹோ ஓஹோ

1. வாலிப நாட்களிலே
   இயேசுவை நினைத்திடுவாய் – 2
   வருகையின் காலத்திலே
   இயேசுவுக்காய் வாழ்வாய் – இன்றைய

2. பலவானின் அம்புகளாய்
   சாத்தானை ஜெயித்திடுவாய் – 2
   பாரங்கள் நிறைந்தவனாய்
   பாரினில் நடந்திடுவாய் – 2 – இன்றைய

3. எக்காள தொனியோடே
   எழுப்புதல் கண்டிடுவாய் – 2
   எரிகோ கோட்டைகளை
   என்னாளும் தகர்ந்திடுவாய் – 2 – இன்றைய

4. தாவீதின் நினைவுகளால்
   எதிரியை வென்றிடுவாய் – 2
   தானியேல் கனவுகளால்
   தேசத்தை மாற்றிடுவாய் – 2 – இன்றைய

## 34. சிங்காசனத்தில் வீற்றிருக்கும்

சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
தேவமைந்தனே – உம்மை
சங்கீதத்தினால் பாடி என்றும் ஆர்ப்பரின்பேனே! – 2
“ஆர்ப்பரிப்பேன்! ஆர்ப்பரிப்பேன்
தேவ மைந்தனே – ஆருயிராய்
மாறியனதால் ஆர்ப்பரிப்பேன்” – 2

1. வலது புறத்தில் வீற்றிருக்கும்
   தேவ மைந்தனே உம்மை
   வானுயற புகழ்ந்து
   என்றும் ஆர்ப்பரிப்பேனே – 2 – ஆர்ப்பரிப்பேனே

2. ஜெயங்கொண்டு அமர்ந்திருக்கும்
தேவ மைந்தனே – உம்மில்
ஜெயங்கொள்ள வாழ்வில்
நானும் ஆர்ப்பரிப்பேனே – 2 – ஆர்ப்பரிப்பேனே

3. சிலுவையிலே எனக்காய் மரித்த
தேவமைந்தனே உம்மில்
சுகமாய் வாழ என்றும்
நானும் ஆர்ப்பரிப்பேனே – 2 – ஆர்ப்பரிப்பேனே

### 35. நீதியின் சூரியன்

நீதியின் சூரியன்
என்னில் உதித்து விட்டார்
தேவாதி தேவனோடு
என்றுமே தங்கிட
என்னை நடத்திச் செல்வார் – 2

1. ஆரோக்கியம் அடைந்திடவே
அற்புதங்கள் கண்டிடவே – உமது – 2
செட்டைகளின் நிழலில்
என்றுமே தங்கி
சுகவாழ்வு அடைந்திடுவேன் – 2 – நீதியின்

2. சின்னவன் ஆயிரமாய்
சிறியவன் பலத்தவனாய் – உமது – 2
விண்மீனாய் பெருகி
சபைகளால் நிரப்பி
தேசத்தை சுதந்தரிப்பேன் – 2 – நீதியின்

3. நீடித்த நாட்களினால்
இரட்சிப்பை கண்டிடவே – எனது – 2
தேவனாலே என்றும்
வருடங்கள் பெருகி
சுவிசேஷம் உரைத்திடுவேன் – 2 – நீதியின்

4. நித்தமும் நடத்திடவே
நீருற்றாய் மாறிடவே – எனது
சேனைகளின் தேவனால்
பிள்ளைகளோடென்றும்
வருகையில் பறந்திடுவேன் – 2 – நீதியின்

### 36. நீரே எந்தன் சிருஷ்டி கர்த்தர்

நீரே எந்தன் சிருஷ்டி கர்த்தர்
நீரே எந்தன் இரட்சகர்
நீரே எந்தன் மீட்பர்
சுகமாக்கும் வல்லவர் நீரே

சுகமாக்கும் இயேசுவே சுகமாக்கும்
சுகமாக்கும் என்னை சுகமாக்கும் – 2

வல்லமையினால் என்னை சுகமாக்கும்
கிருபையினால் என்னை சுகமாக்கும்
ஆவியினால் என்னை சுகமாக்கும்
அல்லேலூயா, அல்லேலுயா

**You are the Lord**
You are the Lord my creator
You are the lord my savior
You are the Lord my redeemer
You are the Lord my Healer

Heal me O' Jesus heal me
Heal me O' Jesus heal me – 2

Heal my sickness through your power
Heal my sickness through your grace
Heal my sickness through your spirit
Hallelujah, Hallelujah.

## ஸ்நேக புஷ்பமா (Telugu) Vol – 1

### 37. மேக ஸ்தம்பமா

மேக ஸ்தம்பமா, நன்னு நடுப் பிஞ்சுமு,
அக்னிஸ்தம்பமா, நன்னுசுத்திசெய்யுமு
ஆத்ம தேவாநன்னு அபிசேகின்ச்சு
அப்பா தன்ரி நின்னு ஹத்து கொந்தனு

நீவே நன்னு ஆதரிஞ்சு
நீவே நன்னு மார்ச்சு
நீவே நன்னு நடுப்பு ஏசு ... ராஜா – 2

1. காலி வீச்சு த்துவனியை வேகம் வச்சாவு
   பண்ட வைன கிறிஸ்து கர்பானச் சூச்சாவு – 2
   ஜாலி கலாக் ஹிருதயமு நீ மனசு
   வேச்சியுண்டு கனுகுனு சமயமுகே – மேக

2. ஆத்ம நீ கொரககை ஆச படேனு
   தாகா மூத்தோ பிரணமு துருஷ்ணா கொனேனு
   சந்ததி பைனா நீ பரிசுத்தாத்மனு
   தயகா நேடு கும்ம ரிம்பமோ – மேக

3. ஆத்மகு மறுமை எக்கட கெல்லேதன்
   சந்நிதி விடச்சு எச்சோட்ட பரிகிடுதென் – 2
   நன்ன கூச்சி விம்பு பலமைனா தேவா
   நீதோ சதாகாலமு சேர்சு கொனுமு – மேக

## 38. தேவுனி சமுக்க

தேவுனி சமுக்க ஜீவ கவிலேலோ
நீ பேரு உன்னதா – ஆ

1. ஜீவ வாக்யமும் இளச்சாட்டிம்பா
   தம ஜீவத்தமும் அர்பிஞ்சித்திரே – 2
   அத சாக்ச்சுலா கவில லோனா – 2
   நீ பேரு உன்னதா – 2 – தேவுனி

2. ஆகாச மண்டாலமுலலோ திரிகெடு
   அந்தகார செத்துலனு கெலசின
   விஜயா வீருலா கவில லோனா – 2
   நீ பேரு உன்னதா – 2 – தேவுனி

3. பரமுன் னுண்டி பிரபவு திகெகா
   பரிசுத்த கூட்டம் பைகெக யுனகா – 2
   பரிசுத்துல கவில லோனா – 2
   நீ பேரு உன்னதா – 2 – தேவுனி

## 39. ஸ்நேக புஷ்பமா

ஸ்நேக புஷ்பமா ... நா ஸ்நேக புஷ்பமா
வசியிம்பா வச்சினா நா ... ஸ்நேக புஷ்பமா – 2

1. சூ வாசன வீச்சே மல்லே புஷ்பமை
   மனசாரா ஸ்துதிந்து பிரிய வருடா ... – 2 – ஸ்நேக

2. சாரோனு ரோஜா பத்மமுவை
   க்ருதாயன விகசிஞ்சு உன்னதுடை – 2 – ஸ்நேக

3. கலுவரி சிலுவலோ ச்சூப்பின பிரேமா
   கட்டின மைன நன்னு கரி, கிஞ்சுனு ... – 2 –
   ஸ்நேக

## 40. இஸ்ரயேலு

இஸ்ரயேலு நீ வே பிரியுடு
யாக்கோபு நீவு நா பிரயுடவு... – 2
நின்னு னேனு கனு கொன்டினே
நீ பேரு பெட்டி, பிலசித்தனே
“நாதோ உண்டெதெவு
நாதோ உண்டெதெவு – சாதகாலமு” – 2

1. ஏதேனுலு நி தோ வசி இம்பா
   திகி வச்சா நின்னு பிரேமின்சி – 2
   சோதோமுனு தலாச்சன நிராசா செஞ்தானு
   சோலி போவலத்து நின்னு ஹத்து கொந்துன்–இஸ்ர

2. பாலின்ச்சு ஏசு தேவுடனு
   புவி கருதேஞ்ச்சிதி பரிசுத்துடை – 2
   பிரியாவருடை நன்னு சந்திம்பாநீவு
   பிரிய வதுவை நேடு ஆயத்தமா – 2 – இஸ்ரயேலு

3. கடபூரா செப்த சமய முகை
   கனிபெட்டிநீவுஉண்டிணச்சோ – 2
   பிரதான தூதா த்வானி நி வினகா
   நாத்தோ சேர் செதா மத்ய காசெமுனா–இஸ்ரவேலு

## 41. தேவுனி பிரேமா

தேவுனி பிரேமா நா தேவுனி பிரேமா
நா க்ருதயானா நேடு வச்சனு – 2
ஹ ... ஹகா ... ஆராதிந்துன்
ஆர்பாட்டந்தோ நா தேவுனிபாடி
உல்லசிந்துன் – 2

1. நன்னு ஆசீர்வதிம்பா – மகிமனு வீடிதிவி
   நன்னு விடிபிம்பா – ரித்துடவை தவி
   க்ருதக்ன ததோ நின்டி – ஸ்திந்துன்
   நன்னு பிரேமதோ – ஹத்து கொனேனு – 2 –
   ஆஹா

2. காரு ச்சீகடி கம்மி – தபின்சு வேலலோ
   காரமுலு சாச்சி நன்னு – பிரேமதோ பிலச்சித்திரே
   ஸ்துதிபாடி கீர்திந்துன் – நீ பாதமுலு
   நே விடுவனு – 2 – ஆஹா

3. மரண கோதிலோ – நடச்சி வச்சினனு
   ஆபது ஆவரிஞ்சினா – மருவனி தேவுனி
   லேவி நிலபி – நன்னு
   கனபாபா வலே காபாடுன – 2 –ஆஹா

## 42. பிரபு நீதோ

பிரபு நீதோ னுன்டுனு – நின்னு காச்சுனு
அரச்சேதிலோ நின்னு செக்கி யுண்ணாடு – 2

1. அபிஷேகா நாதுடு பிரேமா மயுடு
   யனலேனி க்ருபா – இச்சினா தைவமு – 2 பிரபு

2. நீ தோ னுன்டு – நின்னு ஹத்து கொனுன்
   ஆபது சமயாமுன – நின்னு காச்சுனு – 2 பிரபு

3. சர்வ சக்தி பிரபு – நின்னு காச்சன்
   தெலிசினா பிரவு – நின்னு ஹெச் சின்சினு – 2
   பிரபு

4. யஹோவா ரபா – பரிஹாரி கர்த்தர்
   யஹோவா நிசிநீ – ஜெய தேவுடு – 2 பிரபு

## 43. நீ பாதா லக்கு

நீ பாதா லக்கு கன்னீட கானுக
வில பிஞ்சு ஹ்ருதயனுனைக்கு
நிவே ஆஸ்ரேயம்
கனுலனு சமுத்ரமு தோநிம்பின – பிரபுவா
கனுபாபா நீடிதோ தடிப்பினா தேவா

தேவா ஸ்தோத்திரம்
தேவா ஸ்தோத்திரம் – இயேசு தேவா
அல்லேலுயா – 3
ஆமென் அல்லேலுயா – 2

1. நீது மார்க்கம் நேனு நடச்சு தீப மைனதி
   நீதி சக்தியும் நேனு பலிகே வாக்ய மைனதி – 2
   நீது ஜீவன் போஷின்ச்சு தேச மைனதி
   நீத ஸ்துதி த்ருப்தியோவ் ஆகாரம் மைனதி – 2

2. அர்பிஞ்சு சமயமுனா விடிப்பிஞ்சிதி வையா
   மஞ்சி தல்லி வை நன்னு ஹத்து கொண்டிவி – 2
   பங்காரம் வேண்டி பேரு க்யாதி சமமாஞ்
   நீ பிரேமா தோனா ஹ்ருதயமு பொங்கி
   பொருளுனோ – 2

3. சிலுவா மார்க்கமு மஞ்சி மார்க்கமநிச் சூப்பிதிவே
   ஹிருதயமுனு வசபரச்சு கொப்ப தேவுடா – 2
   ஹிமாலயமுனா குமரி லோனா ஏசு காவாலெ
   ஏசு ஓ தேவுடனி ம்ரோகா வலயுனு – 2

## 44. நாதோ

நாதோ... மாடலாடுனு நா பிரியெடு
நாதோ மாட்லாடுனு – 2

1. ஒன்டரி நன்னு – ச்சூச்சினப்புடு
   தள்ளிகா வச்சி – ஆதரிஞ்சு தேவுடு – நாதோ

2. ஹா கரு கன்னிரு – காஞ்சின தேவுடு
   அத்பு தமுகா தாஹமு – தீர்ச்செனு – நாதோ

3. நன்னு பிலசின வாடு நம்மகமு கலவாடு
   சீயோனுலோ சேர்ச்சி – ஆனந்தின்சுனு – நாதோ

# Hebron Castle Church
# Service Timing

| | | |
|---|---|---|
| **Sunday** | 06:00 am - 08:00 am | Tamil-Telugu Service |
| | 08:30 am - 10:30 am | Tamil Service |
| | 11:00 am - 01:00 pm | English Service |
| | 06:00 pm - 08:00 pm | Tamil-Hindi Service |
| | 08:30 am - 09:30 am | Youth Girls Service |
| | 09:30 am - 10:30 am | Youth Boys Service |
| | 06:30 am - 08:00 am | Children's Service |
| | 09:00 am - 10:30 am | Children's Service |
| **Tuesday** | 06:30 pm - 08:30 pm | Healing Miracle Ministry |
| **Wednesday** | 10:00 am - 12:00 pm | Widows Ministry |
| **Friday** | 10:00 pm | Night Prayer |
| **Saturday** | 10:00 am - 12:00 pm | Women's Fellowship |
| **Second Saturday** | 10:00 am - 02:00 pm | Fasting Prayer and Miracle Ministry |
| **Second Saturday** | 02:00 pm - 04:00 pm | Baptism Service |
| **1st of the month** | 06:00 am - 08:00 am | Promise Word for the Month |